மலர் 8 இதழ் 8

# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்



உள்ளே.....


கவிஞர் யார்?

நீலமலர்

நேயர் குரல்

மதிப்புரை

கவிதை அரங்கம்

கணக்கியலுக்கோர் அறிமுகம்

பாலர் மலர்

படப் போட்டி


கௌரவ ஆசிரியர் :
மு. க. சுப்பிரமணியம்

சதம் 30 15-12-70

கிறிஸ்தவ நேயர்களுக்கு கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துக்கள் உரியதாகுக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்
ஈழத்தில் மிகச் சிறப்பான முறையில்
வெளிவரும் இலக்கிய ஏடு
ஆண்டுச் சந்த 6 ரூபா
இன்றே அனுப்பி ஆதரவு கொடுக்கவும்.
ஆசிரியர் மலர் 21, மத்திய வீதி, மட்டக்களப்பு

பொங்கல் மலர் 1971
பல அஞர்களின் கட்டுரைகள் கவிதைகள்
கதைகளுடன் வெளிவருகின்றது.
பிரதி 50சதம்
இன்றே உங்கள் பிரதிகளுக்குப்
பதிவு செய்து கொள்ளுங்கள்.

நங்கையர் விரும்பும் நவநாகரீக
* நகைகளுக்கும் * வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்
கே. என். எம்.
மீரான் சாஹிப்
— தங்கப்பவுண் நகைமாளிகை —
கன்னதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்.
K. N. M. Meeran Sahib
JEWELLERS & DIAMOND MERCHANT
— SOVEREIGN PALACE —
Kannathiddy, Dial: 585 JAFFNA.

புது வருடக் கலண்டர்
பின் வருவனவற்றில் ஏதேனும் ஒரு
பகுதியை அனுப்பிப் பெற்றுக்
கொள்ளலாம்.
50 மில்வைற் நீல சோப் மேலுறைகள்
10 பார் சோப் மேலுறைகள்
10 சலவைப் பவுடர் மேலுறைகள்
தேவரப் புத்தகங்கள் பெறவிரும்புவோர் மில்க்வைற்
நீலசோப் மேலுறைகள் 10வீதம் அனுப்பிப்
பெற்றுக் கொள்ளலாம்.
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| வெளி அட்டை | ரூபா 75-00 |
| உள் அட்டை | ரூபா 60-00 |
| முதற் பக்கம் | ரூபா 50-00 |
| உட் பக்கம் | ரூபா 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின் 15 வீதக் கழிவுண்டு.

விபரங்களுக்கு எமக்கு எழுதுக.

வெற்றிமணி
253 1/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (இலங்கை)

★

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற் செலவுட்பட

| | |
|---|---|
| இலங்கை | ரூபா 5-00 |
| இந்தியா | ரூபா 6-00 |
| மலாயா | $ 5-00 |

## ஆலோசகர் குழு

இரசிகமணி
கனக. செந்திநாதன்

வி. கந்தவனம் B. A.

ஏ. ரி பொன்னுத்துரை B. A.

காரை.
செ. சுந்தரம்பிள்ளை B. A.

★

கடந்த எட்டு ஆண்டுகளாக

வெளிவரும்

ஈழத்துச் சிறுவர்

மாதப் பத்திரிகை

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய்.

| மலர் 8 | 15-12-70 செவ்வாய்க்கிழமை | இதழ் 8 |
|---|---|---|

# உய்ந்ததிவ் வுலகம்

அமைதியின் உறைவிடம் - அன்பின் இருப்பிடம் - அருளின் திருவிடம் - எளிமையின் சின்னம் - ஏழைகள் அன்பர் - தெய்வத் தூதுவர் ஆருவது சின்னப்ப பாப்பரசரின் திருவடிகளை எமது நாடும் ஏற்றது– ஏற்றம் பெற்றது.

கைதொழுது அடியார் கூட்டம் கடலெனச் சூழ, தெய்வ கீதங்கள் பாட, தேவரும் மகிழ்ந்து வாழ்த்தத் தெய்வ தூதுவர் தரிசனம் கிடைத்தது.

இவ்வரலாறு நிகழ்ச்சி மார்கழிமாதம் 4ஆந் திகதி இரவு இடம் பெற்றது.

கத்தோலிக்கர்கள் மட்டுமல்லர் - எல்லோருமே களித்தனர். கண்டு ஆர்த்தனர், ஆடிப் பாடினர், வேர்த்தனர், மெய்ம் மயிர் சிலிர்த்தனர், வணங்கினர், மக்கள் அரசாங்கத்தை வாழ்த்தினர்.

ஒப்பற்ற திருப்புதல்வரின். வருகையால் உய்ந்தது நம்நாடு. அவர் தரிசனம் யார்க்கும் கிடைப்பதன்று, எப்பொழுதும் ஏற்படுவதுமன்று. பாப்பரசர்கள் உரோமிலேயே வீற்றிருந்து மறையாட்சி புரிகின்ற மரபை மாற்றி மக்களைத் தெய்வீக உணர்வில் வழிப்படுத்தச் சுற்றுலாக் கொண்டார் தூய தூதுவர்.

அவரின் முற்போக்கான சிந்தனைகளும் நற்போக்கான செய்கைகளும் இவ்வுலகை ஈடேற்றும் என்ற நம்பிக்கையில் எல்லோரும் இன்புறுகின்றனர்.

முறைமையான ஒழுங்குபாட்டுடனும் திறமையான கட்டுப்பாட்டுடனும் பாப்பரசரின் வருகையை ஒழுங்கு செய்து ஈழத்தவர்களுக்கு ஏற்றமளித்த எங்கள் அரசாங்கத்தை எல்லோருடனும் சேர்ந்து வெற்றிமணியும் வாழ்த்துகின்றது.

**வெற்றிமணி முஸ்லீம் வாசக நேயர்களுக்கு**
**ஈத்துல் பித்ர் நல் வாழ்த்துக்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் யார்?

இரசிகமணி கனக. செந்திநாதன்

கம்பன் கோதாவரியினை வர்ணிக்கும்போது 'புவியினுக் கணியாய்' என்று தொடங்கி 'சலியுறத்தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர் கவி' யெனக் கிடந்தது என வர்ணிக்கிறான். அகழியைப் பற்றிக் கூறுமிடத்தில் 'புன்கவியெனத் தெளிவின்றி' எனக் கூறியுள்ளான். எளிமை, தெளிவு, ஆழம் என்பவை கவியின் மூல லட்சணங்கள் என்பது அவன் கொள்கை. பாரதியும் கம்பன் வழியையே பின்பற்றிக் கவிக்கு இலக்கணம் கூறியுள்ளான். 'உளம் கொண்டு தெள்ளித் தெளிக்கும் பனுவல் புலவோர்' என்று அழகாகக் கூறுகிறார் குமரகுருபரர். உணர்ச்சியே கவிதையின் ஊற்று என்கிறார் தேசிக விநாயகம்பிள்ளை. இப்படித் தமிழ்க் கவிஞர்கள் கவிதைகளுக்கு இலக்கணம் கூறி வைத்துள்ளார்கள்.

இதோ எங்கள் கவிஞர் ஒருவர் கவிதை என்றால் என்ன? கவிஞர் என்போர் யார்? என்றும் கவிதையிலேயே வடித்துத் தந்துள்ளார். அந்தக் கவிஞர் இலக்கண இலக்கியங்களைத் துறைபோகக் கற்றவர். பண்டிதர், வித்துவான், சைவப்புலவர். அவர் கவிதையின் முதல் வரியைப் பார்த்தாலே திடுக்கிடுவீர்கள். அவர் எப்படித் தொடங்குகிறார் தெரியுமா?

"பாடுகின்றோர் எல்லோரும் கவிஞர் அல்லர்
பாட்டென்றால் பண்டிதர்க்கே உரிமை அல்ல"

என்று ஒரே போடாகப் போட்டு வாயை அடக்கி விடுகிறார். உண்மை. தெட்டத் தெளிவான உண்மை. அதைச் சரியானபடி உண்மையான பண்டிதர் கூறிவிட்டார்.

அப்பால் கவிஞர் யார்? என்று அவரே கூறுகின்றார்.

"ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கேபோல
உணர்ச்சியிலே ஊற்றெழுந்து ஒளியால் ஓங்கி
கவிதை பிறக்கவேண்டும்." என்கிறார் அவர்.



இன்னும் அவர் கவிதையைப் பற்றிக் கூறுமிடத்து முற்போக்குக் கவிஞர்கள் என்று தம்மைத் தாமே கூறுபவர்களைக் கூட அவர் விஞ்சி விடுகிறார்.

கற்கண்டே செழுந்தேனே கனியே என்று
கலகலப்பாய்ச் சுவைப் பெயர்கள் கலந்து நல்ல
சொற்கொண்டு சொல்கின்ற கவிதை எல்லாம்
சொன்னவர்க்கும் தெரியாமல் தொலைந்து போகும்
விற்கொண்டு விடும் வீரன் அம்புபோல
விசைகூடும் அறிவுப் போர் வீறு தாங்கித்
தற்கொண்ட புலமை நெறிச் சொல்லாற் சான்றோன்
சாற்றுகின்ற கவிதை யென்றுஞ் சாவதில்லை.

என்பது அவர் முடிபு. ஆனால் இப்போதைய கவிஞர்கள் — முக்கியமாகப் பண்டிதர்கள் — வித்துவான்கள் — முறைமையாகப் படித்தவர்கள் என்று பெருமை பேசுவோர் என்ன செய்கிறார்கள் என்பதை அவரே தோலுரித்துக் காட்டுகிறார்:

அம்மானை திருப்பள்ளி எழுச்சி கோவை
அந்தாதி கலம்பகங்கள் பார்த்துப் பார்த்து
விம்மாமற் பொருமாமற் கண்ணீர் விட்டு
விலைக்குமா ரடிக்கின்ற மெல்லியர் போல்
சும்மாவோர் உணர்வின்றி சொற்கள் சேர்த்து
சொன்மாலை தொடுக்கின்றார் கவிஞ ரல்லர்.
தன்மானத் துள்ளொளியால் உலகை ஓம்புந்
தனியாற்றல் தாங்கிநிற்போர் கவிஞ ராவார்.

இப்படியாக பாடியுள்ள கவிஞர் உண்மையான கவிஞன் பாரதியாரே என்று முடிவு கட்டி அவரைப் பற்றிப் பாடியுள்ளதைக் கேளுங்கள்.

"பாட்டிற்கோர் புலவனென்றே தமிழ்நாடெங்கும்
பாராட்டும் பாரதியின் கவிதை ஆற்றல்
நாட்டிற்காம் விடுதலைப் போர் வெறியை ஊட்டி
நற்றமிழ்க்கும் மறுமலர்ச்சி நல்கக் கண்டேன்."

இந்தப் பாடல்களை எல்லாம் பாடியவர் வித்துவான்க. வேந்தனாராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நவீனம்:

# நீலமலர்

கா. தமிழ்த்தம்பி

## 8. சிங்காரமும் சீரழிவும்

கண்டாமணி யொலித்தது!

நாற்புறமும் நாத வெள்ளம் பெருக்கெடுத் தோடியது. மக்கள் கூட்டமோ அலைகடலென ஆர்ப்பரித்தது. ஆம்! அன்று பங்குனி உத்திரப் பெருவிழா நாள். குன்றுதோறும் குடிகொண்டு—அன்பர்களின் குறையெல்லாம் தீர்க்கும் வள்ளப் பெருமான் குமரன்தான் சென்னையிலும் வடபழநி நாதனாக அருள்புரிகின்றார்.

கூட்டத்தில் திருடனும் வருவான் என்பதை உறுதிப்படுத்துவதுபோல் பொலீஸ்காரர்களும் ஆங்காங்கே சுற்றியலைந்தனர்.

மணிவேல்—தனசேகரன் இருவரும் கூட்டத்தில் முண்டியடித்தவாறே சுற்றிப்பார்த்தனர். திடீரென்று கூட்டத்தில் ஒரே சல—சலப்பு, விசில்—சத்தம். கரைபுரண்டோடிச் செல்லும் ஆற்றுநீரென மக்கள் கூட்டம் விரைந்தது. ஆங்காங்கிருந்த பொலீஸ்காரர்களை வரும் தடியடிப் பிரயோகம் செய்யத் தொடங்கினர். சற்று நேரத்தில் கூட்டம் கலைந்து வழிவிட்டது. அப்படி யார் அங்கு திடீரென்று வந்தது?

ஆம்! தென்னிந்தியப் பிரபல திரைப்பட நடிகை குமாரி, "ரோஜாஸ்ரீ" தான் தன் அழகிய ரோல்ஸ் ராய்ஸ் காரை விட்டிறங்கினாள். வழக்கமாக அவளுக்கே உரித்தான ஆடம்பர—அலங்கோல ஆடையுடன் காட்சியளித்தாள். பொலீசும் மெய்க் காப்பாளர்களும் பின்னாலேயே வந்தனர். தேவஸ்தான மரியாதை — வரவேற்பு என்ற பெயரால் அவளுக்கு மிகப் பெரிய மாலையொன்று அணிவிக்கப்பட்டது.

'இந்தக் கழுதையை யார் கோவிலில் விட்டது :'

விபரம் தெரிந்த சிலர் மனம் குமுறினர். என்ன செய்வதென்று பேசாதிருந்தனர். கலைத் துறையில் உள்ளவர்களை வருமே மிகுதியான கறைபடிந்த வாழ்க்கை உள்ளவர்கள்தான். இதை எவரும் மறுக்க முடியாது. எல்லாம் ஊரறிந்த உண்மை. என்னவோ இப்படியும் ஒரு வாழ்க்கை—பிழைப்பு!

அர்ச்சனை—அபிடேகம் மிகவும் சிறப்பான முறையில் நடந்தேறியது.

சற்றுநேரத்தில்—

ரோஜாஸ்ரீ சென்றுவிட்டாள். மறுகணம் கூட்டத்திலிருந்த சில வெறி பிடித்தவர்கள் அந்த நடிகை நின்ற — உட்கார்ந்த இடம் இதையெல்லாம் தங்கள் கரங்களினால் தொட்டு கண்களில் வைத்துக் கொண்டனர்.



அதைப் பார்த்ததும் கடகடவென்று வாய் விட்டுச் சிரித்தான் மணிவேல்.

"இதென்னடா தனா பெரிய கொடுமையாக இருக்கு!"

"இதாம்பா சங்ககால வீரம் பேசும் இன்றையத் தமிழகத்தின் சரியான நிலை. இந்த வெட்கக் கேட்டை யாரிடம் போய்ச் சொல்வது? மக்கள் திருந்தினால் ஒழிய எத்தனை வாரியார்கள் அரும்பாடு பட்டாலும் என்ன பயன்?"

"உண்மையிலேயே தமிழனின் போக்கு மிகவும் மோசமாகி விட்டது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். தற்காலத் திரைத்துறை சிறந்த நீதியையோ நல்ல ஒழுக்கத்தையோ கற்பிக்கவில்லை. பாடல்களோ மகா கேவலம்! இந்தச் சீர்கேட்டை ஒழிக்கும்—கண்டிக்கும் முறையில்தான் அடுத்த ஆண்டு முதல் இலங்கை வானொலியில் தமிழ் சினிமாப் பாடல்களை ஒலி பரப்பப்போவதில்லை என்று எங்கள் அரசினர் தீர்மானித்துள்ளனர்."

"அருமையான தீர்மானம். உங்கள் அரசுக்கு நல்ல உள்ளங்களின் ஆதரவு என்றுமிருக்கும்."

"தனா! உனக்குத் தாகமாயில்லே?"

"அதோ! குழாய். வா. போய்த் தண்ணீர் சாப்பிடலாம்."

"அடசே! காப்பி—டீ எதையாவதும் சாப்பிடலாமே. கண்டீனுக்குள் நுழையலாம் வா."

"வேண்டாம்பா. எனக்கு அந்தப் பழக்கமெல்லாம் இல்லே. நீ வேண்டுமானால் போய் வா."

"சரி வேண்டாம்."

இருவரும் பஸ்வந்து நிற்கும் இடத்தை நெருங்கினர். அப்போது—

இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் முருகனின் ஆலயத்தை நோக்கி வந்தனர். மணிவேலின் வியப்பு அதிகமாகியது.

"டே, தனா! இதென்னடா அதிசயம்."

"அதிசயம் ஒன்னுமில்லே—நடைமுறைதான்."

"அப்படியா?"

"ஆமா! இஸ்லாம் பெரியவர் சிக்கந்தர் எனும் பாவா பெரிய முருக பக்தராம். அவர் முருகனின் தலத்தில் அடக்கமானவராம். எனவே, பாவா முருகன் ஆலயத்தின் பின்புறம் இருப்பதாக ஒரு ஐதீகம். சந்தனமெல்லாம் தெளித்து சர்க்கரை படைத்து வழிபாடு செய்வார்கள். 'மெத்தப் படித்தவன் சுத்தப் பைத்தியம்' என்பார்களே அதைப்போல கோளாறெல்லாம் நம்ம சமயத்துலே தான். இந்துக்கள் அல்லாதோர் இந்த மகா மண்டபத்திற்கு அப்பால் செல்லக்கூடாதுன்னு இவன்தான் பெரிசா விளம்பரம் எழுதிக் கட்டுறான்."

"சரி. அதோ கார்!"

கார் வந்து நின்றது. அங்கும் மிகுதியான நெரிசல். எப்படியோ இருவரும் ஏறிக்கொண்டனர். கார் விரைந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அ. சுப்பிரமணியம்**
அ. த. க. வித்தியாலயம்
அப்புத்தளை.

அன்புள்ள வெற்றிமணி ஆசிரியர் அவர்கட்கு,

15-10-70 இல் வெளிவந்த வெற்றிமணி இதழ் பார்த்தேன். கலாச்சாரத்துக்கு ஏற்ற கல்வி என்ற தலையங்கத்தின் கீழ் திருவாளர் மாட்டின்விக்கிரமசிங்கா அவர்களின் உள்ளத்தில் எழுந்த கருத்தை எழுதியிருந்தீர்கள். அது எமது வருங்கால நல் வாழ்வுக்கு ஏற்ற ஒன்ருகும்.

திருவாளர் கனக செந்திநாதன் எழுதிய ஆளில்லை ஐயா! ஆளில்லை என்ற கட்டுரைக்கு நிகரில்லை. திரு. வை. சிவஞானம் அவர்களின் கணக்கியலுக்கோர் அறிமுகம் வர்த்தக மாணவர்களுக்கு மிகவும் உதவியானதாகும், மீராவோடை எஸ். முகம்மதலிபா, நல்லை சித்திரவேல், பதிய தளாவை கே. எம். பாறூக் ஆகியோரின் கட்டுரைகள் பாராட்டப்பட வேண்டியவை. தங்கள் முயற்சி வெற்றி பெறுக.

**பலப்பிட்டி - அரூஸ்**
ஆசிரிய கலாசாலை,
அட்டாளச் சேனை.

வெற்றிமணியை பதியத்தளாவை அன்பர் கே. எம். பாரூக் மூலம் வாசிக்கும் பேறு பெற்றேன். வெற்றி நடைபோடும் இச் சிறுவர் சஞ்சிகையை வாழ வைக்க வேண்டியது யாவரினதும் கடன்.

ஈழத்துச் சஞ்சிகைகளுக்குப் பூரண ஆதரவு அளித்து வரும் நான் வெற்றிமணிக்கும் என்னால் இயன்ற ஆதரவு நல்க விரும்புகிறேன்.

**எம். ஐ. ஏ. ஸத்தார்**
" ஒளி விளக்கு "
கல்ஹின்னை.

வெற்றிமணி வருவது கண்டு பெருமிதம் அடைகிறேன். பலாச்சுளையைப்போன்ற கட்டுரைகளையும், கற்கண்டு போன்ற கவிதைகளையும் அள்ளித்தரும் வெற்றிமணிக்கு எனது நல்லாசிகள்,

வாழ்க வெற்றிமணி!
வளர்க அதன் சேவை!
ஓங்குக அதன் புகழ்!
பரவுக தமிழ் மொழி!

## மாணவர் மன்ற அங்கத்தவர்கள்

90. செல்வி ஜோய் ராஜேந்திரா,
விவசாயப் பாடசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
91. செல்வன் எம். எச். எம். அக்பர்,
சாஹிரு மகாவித்தியாலயம், புத்தளம்.



# மதிப்புரை

**நூல்:** வானம் சிவக்கிறது.
**ஆசிரியர்:** புதுவை. இரத்தின்துரை.
**விலை:** 1 ரூபா. 50 சதம்.
**வெளியீடு:** சுதாஜினி வெளியீடு—திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்.

இருபத்துமூன்று—தலைப்புகளில்—இக்கால இளம் உள்ளங்கள் எதை வேண்டி நிற்கிருர்கள் என்பதைத் தெளிவாகக் காட்டும். இளம் கவிஞர் ஒருவரின் கவிதைப் படைப்பு இந்நூல். "தெருவிலே பசியால் வாடும் திக்கற்ற கூட்டத்துள்ளே ஒருவனுய் நின்று அன்னுர் உணர்ச்சிகளை" எடுத்துக் காட்டும் கவிஞர் இவர். 'பிறந்திடும் புதுமை கண்டு ஏற்றிடும் எனது பாக்கள்' எனத் தன் கொள்கையை வெளிப்படையாகவும் சொல்லியுள்ளார். ஆற்றையும் அருவி தென்றல் காற்றையும் பாடமாட்டேன் என்று அடித்துச் சொல்கிருர். கவிஞரின் கொள்கையை மறுக்க நாம் யார்? ஆயிரம் பூக்கள் பூக்கட்டும்.

கோயிலின் கதவைப் பூட்டும் கொடுமையையும், காந்தி வழியென்று சாந்தி வழி வழி விட்டுப் போர் நடத்திட வேண்டுமென்றும் மக்களாட்சி மலர வேண்டும் என்றும் வியட்நாமில் அமரிக்கர் செய்யும் போரையும் கவிஞர் பாடுகிருர். பல இடங்களில் உணர்ச்சிக்கேற்ற சொற்கள் அழகாக விழுந்திருக்கின்றன.

ஆசிரியரின் புரட்சிப் பாடல்களிலும் பார்க்கக் காதற் பாடல்களே சுவை நிரம்பியதாகக் காணப்படுகின்றன. 'மாவலியே வடக்கே போனுல்' என்ற கவிதை அவரின் வெற்றிக் கவிதையாகும். 'காதலிக்கு ஒரு கடிதம்' என்ற தலைப்பில் உள்ள கவிதைகளில் 'பெருமாள் என்றழைக்கின்ற தமிழன்' 'சிற்ருடை தன்னைப் பூந்தென்றல் தூக்க' என்ற கவிதைகள் வாலிபர்களுக்கு கிழு கிழுப்பை ஊட்ட வல்லன என்பதுண்மை.

அறிஞர் அண்ணுவைப் பற்றிப் பலர் பாடியுள்ளனர், பலர் கட்டுரை நூல்கள் எழுதியுள்ளனர். ஆனுல் இரத்தினதுரை ஏழு பாடல்களுக்குள்ளே அவரது குறிக்கோளை தொட்டுக்காட்டி அழகாகப் பாடியுள்ளார்.

பல மூத்த கவிஞர்களது கவிதைகளில் வரும் தொடர்களும், சந்தமும் அப்படியே சில பாடல்களில் கையாளப்பட்டிருக்கின்றன. இது இளம் கவிஞர்களுக்கு இயற்கை எனினும் தனக்கெனத் தனி வழி வகுத்துக் கொள்ளல் நல்லது. இரத்தினதுரை ஈழத்தில் நல்ல கவிஞனுக மிளிர்வார் என்பதற்கு வானம் சிவக்கிறது ஓர் அறிகுறி

'கவிதைப்பித்தன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புத்தி வேண்டும்

— அன்புடீன், மட்டக்களப்பு. —

இறையை வணங்க வேண்டும் — ஒன்ருய்
இணைந்து வாழல் வேண்டும்
மறையை படிக்க வேண்டும் — தமிழ்
மாண்பை வளர்க்க வேண்டும்!
நோக்க மொன்று வேண்டும் — அதில்
ஆக்க மிருக்க வேண்டும்
தூக்க மொழித்து நாமும் — பிறர்
துயர் துடைக்க வேண்டும் !
அன்பி லுயர்ச்சி வேண்டும் — நல்
அறிவில் வளர்ச்சி வேண்டும்
பண்பு நெஞ்சில் வேண்டும் — தமிழ்
பழக்க வழக்கம் வேண்டும் !

## பேணுதல் செய்வோம்

— சேனையூர், அ. அரசரெத்தினம் —

மாணவர் நாங்கள்
மறந்து விடாமல்
மானம் காக்க
மார் தருவோமே!
கல்வியைக் கற்போம்
கற்றதில் நிற்போம்
கண்ணியம் காப்போம்
கடமையைச் செய்வோம்!
ஒன்றே எங்கள்
குலம் என்போமே!
ஒன்றே தெய்வம்
உண்மை யென்போமே!

ஆணவம் என்ற
அசுரனை அழிப்போம்
பேணுதல் செய்வோம்
பெரியவர் அன்பை!
எளிமையுற் ருலும்
இயன்றதை ஈவோம்
எழுத் தறிவிக்கும்
இறைவனை மதிப்போம்!
அன்பே பெரிது
அதுவே நமது
ஆலய நெஞ்சில்
அழியா வித்து!



## எழிற்கோலம்

— புதுவை, இரத்தினதுரை. —

எங்கும் நிறைந்தது வானமடா — அதில்
எத்தனையோ எழிற் கோலமடா
தம்பியரே ! ஓடி வருங்கடா — நான்
தந்த கவியுடன் பாருங்கடா.

நீலநிறப் புது ஆடையிலே -- பல
நித்திலங்கள் குத்தி வைத்ததுபோல்
நாலா புறத்திலும் கண்சிமிட்டும் — அந்த
நட்சத்திரக் கூட்டம் பாருங்கடா.

எங்கள் அமெரிக்க நாட்டவர்கள் — கொடி
ஏற்றிப் பிடித்திட்ட அம்புலிமான்
பொங்கிடும் பால்நுரை போலவொளி — தரும்
புதுமையைக் காணிட வாருங்கடா.

ஓடிப் பிடித்துமே வான்முகில்கள் — பல
ஒற்றுமை யாகவே ஆடுகையில்
பாடிப் பறக்குது வெண்முகிலே — அதைப்
பார்த்து மகிழ்ந்திட வாருங்கடா.

மேற்குப் புறத்திலே ஆதவனுர் — போய்
மேனி மறைந்ததும் வானமதில்
மாற்றம் பலபல தோன்றுதடா — அதை
மகிழ்ச்சியுடன் வந்து பாருங்கடா.

காலை புலர்ந்திடில் இத்தனையும்—நாம்
காணமுடியாது தம்பியரே!
வேளை யிதனைநீர் விட்டிலோ—பெரும்
வேதனை கொள்ளுவீர் தம்பியரே!

பாடல் எழுதி முடிந்ததுவே—அதைப்
பார்த்து நிலவினில் பாடுவதும்
ஆடல் புரிவதும் உம்பொறுப்பு—அதில்
ஆனந்தம் கொள்வது என்பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழுதுவடிவாயோ சொல்

வளலாயூர், செ. சிவசம்பு

செய்யுந் தொழிலறியேன் உய்யும் வழியில்லைத்
தெய்வமே என்றேங்கும் மெய்யுணரா வாலிபனே
பெய்யும் பெருமழையும் வெய்யோனின் கதிரொளியும்
வையத்தின் வளமண்ணும் செய்யுந் தொழிலுணர்தலையோ!

வெய்யோனின் கதிரொளியே செய்தொழிற்குச் சக்தியடா
பெய்யும் பெருமழையே உய்வளிக்கு மமுதமடா
வையத்து வளமண்ணே மெய்யான செல்வமடா
மெய்யின்ப வாழ்வுதனை ஏரொன்றே உதவுமடா.

காக்கும் கடவுளென்று ஊக்கம் எதுவுமின்றித்
தேக்கம் அடைவாயேல் காக்கும் கடவுளுமை
நோக்க விரும்பாது ஏக்கம் உறுவீரே
ஆக்கம் பெறவேண்டில் ஊக்கம் மறவாதீர்.

வளமான வாழுந்நெறி வளங்குங் குறள்கூறும்
உழவின் பெருமையினை வழுவின்றி நீருணர்ந்தால்
தொழுதூண் சுவைநாடி உழுதூண் பணிமறந்து
தொழிலேதும் இல்லையென்று அழுதுவடிவாயோ சொல்!

✶✶

## ஆட்டுக் குட்டி

" சாரணு கையம் "

பதுங்கிப் பார்க்குதே — புலி
பதுங்கப் பார்க்குதே,
ஒதுங்கிச் செல்லவே—என்றால்
முடிய வில்லையே.

வேக மாகவே — குகை
வாயில் நோக்கியே
சாக டிக்கவே — என்னைக்
கூட்டிச் செல்லுதே.

ஆரும் இல்லையோ — குரல்
கேட்க வில்லையோ,
பாரில் என்னைப்போல் — ஒரு
பாவி இல்லையே.

ஆட்டுக் குட்டிநான்—வயது
ஆறு மாதமே
மீட்க வாருங்கள் — ஐயோ
மீட்க வாருங்கள்.



## கணக்கியலுக்கோர் அறிமுகம் (29)

—: வை. சி. சிவஞானம் :—

வங்கிக் கூற்றில் Dr. ( ) பக்கத்தில் பதிந்த நடவடிக்கைகளில் சில காசேட்டின் வங்கி நிரல் Cr. ( ) பக்கத்தில் பதியப்பட்டிராதுவிடின் அந் நடவடிக்கைகளின் தொகைகளை வங்கிக் கூற்று மீதியுடன் கூட்டல் வேண்டும்.

வங்கிக் கூற்றின் Cr. ( ) பக்கத்தில் பதிந்த நடவடிக்கைகள் சில காசேட்டு வங்கி நிரலின் Dr. ( ) பக்கத்தில் பதியப் படாதுவிடின் அந் நடவடிக்கைகளின் தொகைகளை வங்கிக் கூற்று மீதியிலிருந்து கழித்தல்வேண்டும்.

காசேட்டு வங்கி நிரலில் ஏற்படுவதுபோன்ற பிழைகள் தவறுகள் பெரும்பாலும் வங்கிக் கூற்றில் இடம்பெறா. காசேட்டில் ஏற்பட்ட பிழைகள் - தவறுகள் என்பவற்றின் தன்மைக்கேற்ப ஏற்ற தொகைகளை வங்கிக் கூற்று மீதியுடன் கூட்டல் அல்லது கழித்தல் வேண்டும்.

காசேட்டு வங்கி நிரல் மீதியிலிருந்து வங்கிக் கூற்று மீதியைக் காண்பதற்குத் தரப்பட்ட நடவடிக்கைகளின் அட்டவணையிலுள்ள (கழிக்கவேண்டியவை பகுதியிலுள்ள) I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X என்னும் இலக்கங்களிடப்பட்ட நடவடிக்கைகளைக் கூட்டுதல் வேண்டும். அவ்வட்டவணையிலுள்ள (கூட்டவேண்டியவை பகுதியிலுள்ள) *1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10* என்னும் இலக்கங்களிடப்பட்ட நடவடிக்கைகளைக் கழித்தல்வேண்டும்.

கழிக்கவேண்டிய நடவடிக்கைகளின் கூட்டுத் தொகையிலும் பார்க்க, வங்கிக் கூற்று மீதித் தொகையையும், கூட்ட வேண்டிய நடவடிக்கைகளின் கூட்டுத் தொகையையும் கூட்ட வருந் தொகை குறைவாயின் வித்தியாசத் தொகை வங்கி மேலதிகப் பற்றாகும்.

வங்கிக் கூற்று மேலதிகப் பற்றாயிருப்பின் காசேட்டு வங்கிநிரல் தொகையைக் காண்பதற்கு, வங்கி மேலதிகப் பற்றுத் தொகையை — தொகையெனக்கொண்டு, வங்கி மீதியாக இருக்கும் பொழுது கழித்த நடவடிக்கைகளின் தொகைகளையும் — தொகைகளெனக் கொண்டு இரு தொகைகளையுங் கூட்டுதல் வேண்டும். அல்லது இந் நடவடிக்கைகள் வங்கி மேலதிகப் பற்றுத் தொகையை அதிகரிக்குமெனக்கொண்டு கூட்டுதல் வேண்டும். இவ்விதம் செய்து வந்த தொகையை — தொகையெனக் கொண்டு, இத் தொகையிலிருந்து வங்கி மீதியாக இருக்கும்போது கூட்டிய நடவடிக்கைகளின் தொகைகளை + தொகைகளெனக் கருதிக் கழித்தல்வேண்டும். அல்லது வங்கி மேலதிகப் பற்றை இந் நடவடிக்கைகள் குறைக்குமெனக் கருதிக் கழித்தல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிக் கூற்று மேலதிகப் பற்ருகவிருப்பின் காசேட்டு வங்கிநிரல் மீதியிலிருந்து வங்கிக் கூற்று மீதியைக் காண்பதற்குத் தரப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு அட்டவணையிலுள்ள (கூட்ட வேண்டியவை பகுதியிலுள்ள) 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 என்னும் இலக்கங்களிடப்பட்ட நடவடிக்கைகளின் தொகைகளை — தொகைகளெனக் கருதி அல்லது மேலதிகப் பற்றை அதிகரிக்குமெனக் கருதிக் கூட்டுதல் வேண்டும். அவ்வட்டவணையிலுள்ள (கழிக்கவேண்டியவை பகுதியிலுள்ள) I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X என்னும் இலக்கங்களிடப்பட்ட நடவடிக்கைகளின் தொகைகளை + தொகைகளெனக் கருதி அல்லது வங்கி மேலதிகப் பற்றைக் குறைக்குமெனக் கருதிக் கழித்தல் வேண்டும்.

வங்கிக் கூற்றின் மேலதிகப் பற்றுத் தொகையுடன், கூட்டவேண்டிய நடவடிக்கைகளின் கூட்டுத் தொகையையும் கூட்டி வருந்தொகையிலும் பார்க்கக் கழிக்கவேண்டிய நடவடிக்கைகளின் கூட்டுத்தொகை கூடுதலாகவிருப்பின் கூடுதல்தொகை வங்கி மீதியாகும்.

காசேட்டு வங்கி நிரல் மீதியிலிருந்து வங்கிக் கூற்று மீதியைக் காண்பதற்கும், வங்கிக் கூற்று மேலதிகப் பற்றிலிருந்து காசேட்டு வங்கி நிரல் மீதியைக் காண்பதற்கும் கூட்டவேண்டிய நடவடிக்கைகளும், கழிக்கவேண்டிய நடவடிக்கைகளும் ஒரே தன்மையானவை. மேல் தரப்பட்ட அட்டவணையில் கூட்டப்படவேண்டியவை பகுதியிலுள்ள நடவடிக்கைகளைக் கூட்டுதல் வேண்டும். கழிக்கவேண்டியவை பகுதியிலுள்ள நடவடிக்கைகளைக் கழித்தல் வேண்டும்.

காசேட்டு வங்கி நிரல் வங்கி மேலதிகப் பற்ருக விருக்கும்போது வங்கிக் கூற்று மீதியைக் காண்பதற்கும், வங்கிக் கூற்று மீதியிலிருந்து காசேட்டு வங்கி நிரல் மீதியைக் காண்பதற்கும் கூட்டவேண்டிய நடவடிக்கைகளும் கழிக்கவேண்டிய நடவடிக்கைகளும் ஒரே தன்மையானவை. மேலே தரப்பட்ட அட்டவணையில் கூட்டப்பட வேண்டியவை பகுதியிலுள்ள நடவடிக்கைகளைக் கழித்தல் வேண்டும். கழிக்க வேண்டியவை பகுதியிலுள்ள நடவடிக்கைகளைக் கூட்டுதல் வேண்டும்.

உ+ம்:- 1 சதானந்தனின் வங்கிக் கூற்று 30-4-70-ம் திகதி 4250 ரூபா மீதியாகக் காட்டியது. அத் திகதியில் காசேட்டு வங்கி நிரல் வேருேர் தொகையைக் காட்டியது. இரண்டையும் ஒப்பிட்டபோது பின்வரும் வித்தியாசங்கள் காணப்பட்டன.

(அ) சதானந்தனுல் வங்கிக் கனுப்பப்பட்ட 1325 ரூபா பெறுமதியான காசோலைக்கு வங்கி இத் திகதிவரை பணம் அறவிடவில்லை.

(ஆ) சதானந்தனுல் கடன் கொடுத்தோருக்குக் கொடுக்கப்பட்ட 975 ரூபா காசோலை இத் திகதிவரை வங்கியில் கொடுத்து மாற்றப்படவில்லை.



(இ) வங்கிக் கனுப்பிய 575 ரூபா காசோலையொன்று காசேட்டில் 755 ரூபாவெனப் பிழையான பக்கத்தில் பதியப்பட்டது.

(ஈ) வங்கி திரட்டிய பங்குலாபம் 375 ரூபா காசேட்டில் பதியப்படவில்லை.

(உ) சதானந்தனுக்காக வங்கி செலுத்திய காப்புறுதிக் சட்டணம் 250 ரூபாவும், காசோலைப் புத்தகக் கட்டணம் 15 ரூபாவும் காசேட்டில் பதியப்படவில்லை.

காசேட்டு வங்கி நிரல் மீதி யாது?

## காசேட்டு வங்கி நிரல் மீதி காணல்:-

| | | | | |
|---|---|---|---|---|
| | 30-4-70-ம் திகதி வங்கிக் கூற்று மீதி | | | 4250 |
| கூட்டுக:- | அறவிடப்படாத காசோலை | | 1325 | |
| | காசேட்டில் பதியப்படாத காப்புறுதிக் கட்டணம் | | 250 | |
| | ,, ,, காசோலைப் புத்தகக் ,, | | 15 | 1590 |
| | | | | 5840 |
| கழிக்குக:- | மாற்றப்படாத காசோலை | | 975 | |
| | பிழையான பக்கத்தில் பிழையாகப் பதியப்பட்ட தொகை | 755 | | |
| | உண்மைத் தொகை | 575 | 1330 | |
| | காசேட்டில் பதியப்படாத வங்கி திரட்டிய பங்குலாபம் | | 375 | 2680 |
| | 30-4-70 காசேட்டு வங்கி நிரல் மீதி | | | 3160 |

உ+ம்:- 2 சிவநேசனின் 31-8-70-ம் திகதி வங்கிக் கூற்று மீதி 785 ரூபா எனக் காட்டியது. அத் திகதியில் காசேட்டு வங்கிநிரல் வேருேர் தொகையைக் காட்டியது. இரண்டையும் ஒப்பிட்டபோது பின்வரும் வித்தியாசங்கள் காணப்பட்டன.

(அ) சிவநேசனுல் வங்கிக் கனுப்பப்பட்டு வங்கியால் பணம் வசூலிக்கப்படாத காசோலை 425 ரூபா.

(ஆ) சிவநேசனுல் வழங்கப்பட்டு இத் திகதிவரை வங்கியில் கொடுத்து மாற்றப்படாத காசோலைகளின் தொகை 2475 ரூபா.

(இ) வங்கிக் கனுப்பிய 750 ரூபா காசோலையொன்று காசேட்டில் 570 ரூபா எனப் பிழையாகப் பதியப்பட்டது.

(ஈ) வங்கிச் செலவு 25 ரூபா காசேட்டில் இருமுறை பதியப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) கடன்பட்டோன் ஒருவன் வங்கியில் சிவநேசன் பேரில் கட்டிய 925 ரூபா காசேட்டில் பதியப்படவில்லை.

(ஊ) சிவநேசனுக்காக வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம் 125 ரூபாவும், சிவநேசனுக்காக வங்கி திரட்டிய வாடகைப் பணம் 480 ரூபாவும் காசேட்டில் பதியப்படவில்லை.

31-8-70-ம் திகதியன்றுள்ள காசேட்டு வங்கி நிரல் மீதி யாது?

## காசேட்டு வங்கி நிரல் மீதி காணல்:-

| | | | |
|---|---|---|---|
| | 31-8-70 வங்கிக் கூற்று மீதி | | 785 |
| கூட்டுக:- | அறவிடப்படாத காசோலை | 425 | |
| | காசேட்டில் பதியப்படாத காப்புறுதிக் கட்டணம் | 125 | 550 |
| | | | 1335 |
| கழிக்குக:- | வங்கியில் மாற்றப்படாத காசோலை | 2475 | |
| | காசேட்டில் குறைவாகப் பதியப்பட்ட காசோலையின் வித்தியாசம் | 180 | |
| | காசேட்டில் இருமுறை பதியப்பட்ட வங்கிச் செலவு | 25 | |
| | கடன்பட்டோன் வங்கியில் கட்டிக் காசேட்டில் பதியப்படாத தொகை | 925 | |
| | காசேட்டில் பதியாத வங்கி திரட்டிய வாடகைப் பணம் | | 3605 |
| | 31-8-70 காசேட்டு வங்கி நிரல் மேலதிகப் பற்று (வங்கிக் கடன்) | | 2270 |

உ+ம்: 3 சிவநாதனின் வங்கிக் கூற்று 30-9-70-ம் திகதி வங்கி மேலதிகப் பற்று 3795 ரூபாவெனக் காட்டியது. அத் திகதிக்குரிய காசேட்டு வங்கி நிரல் வேறோர் மீதியைக் காட்டியது. இரண்டையும் ஒப்பிட்டபோது பின்வருந் தவறுகள் காணப்பட்டன.

(அ) சிவநாதனுல் வங்கிக்கு அனுப்பி வங்கியால் வசூலிக்கப்படாத காசோலை 1850 ரூபா.

(ஆ) சிவநாதனுல் வழங்கப்பட்டு வங்கியில் மாற்றப்படாத காசோலை 2975 ரூபா.

(தொடரும்)




# அருள் பொழியும் அருமை ரம்ழான்

செல்வி மும்தாஜ் அப்பாஸ், கிருங்கதேனியா

வருடத்தின் வரப்பிரசாதமாக விளங்கும் புனித ரம்ழான் மாதம் நம்மை அடைந்துவிட்டது. மாதங்களுக்கு ரம்ழான் எவ்வாறு வரப்பிரசாதமோ அவ்வாறே அமலனுல் அருட்கொடையாக அளிக்கப்பட்டுள்ள நோன்பு லட்ஷோப லட்ச மக்களுக்கு வரப்பிரசாதமாகும். நம்மை நல்வழிப்படுத்த நாடிவரும் நோன்பை நாம் வரவேற்று மிக கண்ணியப்படுத்த வேண்டும். தவமிக்க இம்மாதத்திலே பல நல்ல மல்களை செய்ய வேண்டும். மதபக்தியை வெளிப்படுத்தவும், மதத்தின்பாலுள்ள பேரன்பைப் பெருக்கவும் மார்க்க அபிமானத்தையும் ஆத்மீகத்தையும் வளர்ப்பதுடன் ஏழை பணக்காரன், அரசன், ஆண்டி என்ற பேதங்களை அழிக்கவும் நோன்பு உதவி புரிகின்றது.

அமலன் தன் அருள் மறையாம் திருமறையில் 'நீங்கள் பரிசுத்தவான்களாகும் பொருட்டு உங்களுக்கு முன்னிருந்தோர்மீது விதிக்கப்பட்டிருந்தது போலவே உங்கள் மீதும் நோன்பு விதிக்கப்பட்டுள்ளது' எனக் கூறியுள்ளான். பகுத்தறிவைப் படைத்த இறைவன் பாவச் செயலை விட்டு மீழவும் அவனே வழிகாட்டியுள்ளான். நாம் மென்மேலும் பாவச்சகதியில் மிதியாமல் நன்மையைத் தேடி நற்பாதையில் செல்ல நோன்பெனும் கலங்கரை விளக்கம் காத்தருளும்.

ஏக தெய்வனுக்காக உணவுப் பானங்களை விட்டுத் தவிர்ந்து தன் மனோவிச்சைகளை அடக்கி மனதைக் கட்டுப்படுத்தி தன்னுதிக்கத்தில் ஆக்கிக் கொண்டிருக்கும் புண்ணிய மிக்க இக்காலங்களில் அமலனின் நேசம் கிட்டுவதுடன், எண்ணற்ற அவனது அருட்கொடைகளுக்கு நன்றி செய்யுமுகமாக செய்யும் தானதருமங்கள், கொடைகள், காருண்யங்கள் யாவற்றிற்கும் ஒன்றினுக்கு எழுபதாகவோ அதற்குக் கூடுதலாகவோ அளிப்பதாக அவன் உறுதியளித்துள்ளான். ''அல்குர்ஆனின் நோன்பு எனக்குச் சொந்தமானது. அதற்கு நானே கூலி கொடுப்பேன்'' என்று வலியுறுத்தியுள்ளான்.

அனுஷ்டபூர்வமாக நோன்பை நோக்குமிடத்து நிச்சயம் நோன்பினுல் பாவங்கள் அழிக்கப்படும். உண்பதற்கு அறுசுவை உணவும், நற்சுகபோகமிருந்தும் அதைபனுபவிக்காது ஒரே நம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கையுடன் தூய வல்லோனுக்காக நோன்பு நோற்பவனே உண்மையான நோன்பாளி. உலர்ந்த உதடும், பசித்த வயிறும். வரட்சியான வதனமும் நோன்பின் தாற்பரியத்தின் எடுத்துக் காட்டாய் அமைந்து விடப்போவதில்லை. நோன்பெனும் விரதம் எண்ண அலையின் பரிசுத்தத்தையும் செயல்களில் கட்டுக்கோப்பையும் எந்நேரமும் நிலைநிறுத்த வேண்டும். திரு. நபி (ஸல்) அவர்கள் நோன்பாளியுடைய நித்திரை வணக்கமாகும். அவனுடைய மூச்சு தஸ்பீஹாகும். அவனுடைய துவா கபூலாகும். அவனுடைய பாவங்கள் பொறுக்கப்பட்டுப்போகும். அவனுடைய அமலுக்கு நன்மை இரட்டிப்பாக்கப்படும் எனத் திருவாய் மலர்ந்தருளினார்கள். இதிலிருந்து நோன்பாளி எவ்வளவு மகிமைப்படுத்தப்படுகிறான் என்பதையறியலாம். நோன்பு நோற்பதினால் தனது ஜீவியத்திற்கு தேவையான தொழில்களை யெல்லாம் விட்டுவிடவேண்டியதென்ற அவசியமில்லை. தன் ஜீவனோபாயத்திற்காகவும், தன் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும், மறுமைப் பேரடைய இல்லற வாழ்க்கைக்காகவும் தொழில் புரிதல் நோன்பு காலங்களில் சிறந்ததோர் அமலாகும்.

அறநெறியைப் புகட்டி, ஆணவத்தையடக்கி, இறை பக்தியை மேம்படுத்தி ஈகையை உய்விப்பதே நோன்பின் நோக்காகும். ஏழைகளின் பசிக் கொடுமையை யுணர்ந்தும், அவர்கள் வறுமையையறிந்தும் உதவி செய்யத் தூண்டும் சாதனம் நோன்பே. 'ஸகாத்து' 'ஸதக்கா' எனும் தான தருமங்களை இந்நாட்களில் அள்ளியிறைத்து ஆண்டவனின் அருட்கடாட்சத்தை இரட்டிப்பாகப்பெற முனையவேண்டும்.

மேலும் இம் மாதத்திற்கேயுரிய ''தராவீஹ்'' எனும் இராத் தொழுகையை தவறவிடாது நிறைவேற்ற வேண்டும். அகத்தில் நம்மையறியாமல் சூழ்ந்துள்ள இருளையகற்றி தூய்மையை ஒளி பெறச் செய்யும் வணக்கமாகும். இப்புனித மாதத்தில்தான் இறை நெறியைப் போதிக்கும் இறை மறையாம் திருமறையை உலக உத்தமர் நபிகள் திலகம் அவர்கள் மூலம் உலகத்திற்கு அளித்தான். அந்த அருள் மறையே மனிதனை நேர்வழிப் படுத்தி வாழ வழி வகுக்கின்றது. ரம்ழான் மாதத்தில் திருக்குர் ஆனை மனனம் செய்வது சிறந்ததோர் அமலாகும்.

மற்றுமோர் மகத்துவமிக்க இரவை இறைவன் இனாமாக நமக்கு அளித்துள்ளான். அந்த மேன்மைமிகு ''லைலத்துல்கதிர்'' என்னும் அற்புத இரவைத் தன்னகம் தாங்கிய பெருமை ரம்ழான் மாதத்தையே சாருகின்றது. அந்த இரவின் மகிமையை அளித்த அமலனேயன்றி வேறு யார் அறிவர்? அந்த இரவில் நித்திரைக்கு ஓய்வளித்து விழிப்புக்கு புத்துணர்ச்சியூட்டி தூய வல்லோனை வணங்க வேண்டும். நம்மை அறிந்தோ அன்றி அறியாமலோ நிகழ்ந்துள்ள



பாவக் கறைகளை அறவே அழிக்கவேண்டும். மற்ற நாட்களில் ஒரு நல்லமலுக்கு ஒரு நன்மையென்றால் இவ்வரிய தினத்தில் ஒரு நல்லமலுக்கு பல நன்மைகள் அளிக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ரம்ழான் நோன்பென்பதால் அதை கடமைக்காக நோற்றுவிடலாம் எனக் கருதக்கூடாது. இம்மாதத்தில் நோன்பு விரதமிருந்து நன்மை பெறுவது போலவே, ஏனைய நாட்களிலும் தீமையையகற்றி நன்மையை நாடவேண்டும். முஸ்லிம்களாகிய நாம் எக் காரணம் கொண்டும் நோன்பை அலட்சியம் செய்யக்கூடாது. அற்ப ஆசைகளையும், நிலையற்ற இன்பங்களையும் வெறுத்து நிலையான இறைவனது அருளை பெறுவதற்கு நோன்பே அற்புத சாதனமாகும்.

எனவே மாண்புமிகு ரம்ழானும் மகத்துவமிகு நோன்பும் நன்மை அடைந்துவிட்டன. ஐம்பொறிகளையும் அடக்கி அமலனுக்கு அவனது நோன்பை நோற்கவேண்டும். நல்லமல்கள் ஒன்றேனும் தவறவிடாது செய்யவேண்டும். உலக இரட்சகர் நபிகள்கோமான் காட்டித் தந்த நல்வழியைப் பின்பற்றி இறைவனின் நல்லடியானாக இம்மையிலும் மறுமையிலும் திகழவேண்டும். எனவே இம்மாண்புமிக்க ரம்ழானிலே எல்லாம்வல்ல தூயோன் சகல முஸ்லிம்களின் பாவங்களனைத்தையும் மன்னித்து உண்மைத் தூதர் (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டில் நடக்க நல்லருள் புரிவானாக!

## தமிழ் கவிஞர் பாரதி

ம. யோகேஸ்வரன், மீசாலை.

அந்நியர் ஆட்சியிலும், அடிமை இருளிலும் அறியாமையிலும் ஆழ்ந்திருந்த தமிழகத்தைப் பள்ளியெழுச்சி பாடித் துயிலெழுப்பியவர் பாரதியாராவர். தமிழ்த் தாயின் தவப்பேறாகிய இவர் ஒரு தேசியக் கவிஞராவர்.

இவர் எட்டயபுரத்திலே பிறந்தார். சிறுவயதிலே துள்ளித்திரியும் பருவத்திலே பாடசாலைக்குப் போகாது வாவிக் கரைகளிலே வண்ணச் சோலைகளிலே இயற்கையின் எழிற் காட்சிகளைப் பார்த்து இன்புற்றார். இவை இவரது உறங்கிக் கிடந்த கவிதா சக்தியை தட்டியெழுப்பின.

இவரது இதயப் புதையலிலிருந்து இனிய கவிமணிகள் வெளிவந்ததினால் பாலகனான பாரதி பாடத் தொடங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னான். புதுமைத் தாகமும் எண்ணமும் கொண்ட பாரதி ஆயிரமாயிரம் கவிதைகளைப் பாடினார். ''ஓடிவிளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது'' என்று சிறு குழந்தைகளுக்கு உற்சாக மூட்டினார். புதுமைப் பெண்ணே எழுந்திரு. ஆணுக்குப் பெண் இளைத்தவளல்ல என்று ஆடிப் பாடிக் கும்மியடி என்று அவளுக்கு ஆர்வமூட்டினார்.

கம்பனைப்போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை என்று தமிழ்க் காவியங்களில் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டினார். பாரதி பாடாத பொருள் இப்பூமியில் இல்லை என்று சொல்லலாம். எல்லாருக்கும் எல்லாம் பாடி இறவாத புகழ் பெற்றார். அவரது பாடல்கள் ஒவ்வொன்றும் நறுமணம் வாய்ந்தன. இவரது பாடல்களைப் பாராட்டாத பாமரரும் பண்டிதரும் கிடையாது. இதனால் தான் பாட்டுக்கொரு புலவன் பாரதியடா என்று தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பாடியுள்ளார்.

செந்தமிழிலே சிறந்த கவிதைகளை இயற்றியமையால் அவனது கவிதைகளைப் படித்த அன்பர்கள் அவனுக்கு பாரதி என்று பட்டப் பெயரும் வழங்கியுள்ளனர். இளம் வயதில் சுப்பிரமணியனாகத் திகழ்ந்தவன் பின் சுப்பிரமணிய பாரதியாக மாறினான். இன்று முதல் தேசிய கவிஞனாக மலர்ந்தான்.

சிறு வயதிலேயே செல்லம்மாள் என்னும் பெண்ணைக் கைபிடித்து வாழ்க்கை நடத்தினான். இவ்வமர கவிஞன் உத்தியோகத் துறையிலும் தொழில் புரிந்துள்ளார். இத்தகைய சிறந்த கவிஞன் 1921-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11-ம் தேதி மதங்கொண்ட யானையினால் தூக்கி எறியப்பட்டார். மரணம் என்னும் பெருந்திரையுள் மறைந்தார். அன்று நாம் மறக்கமுடியாத சோக தினமாகும்.

பாரதி மறைந்தாலும் பூதவுடல் எரிந்தாலும் புகழுடம்பானது பாரிலே பரவி நிலவுகின்றது. பாரதி திருநாள் எங்கும் கொண்டாடப்படுகிறது. தமிழ் வாழும் வரை பாரதியும் பாரதியின் கவிதைகளும் வாழும் என்பதில் சிறிது ஐயமில்லை.



# ஐக்கிய நாடுகள் தாபனம்

எச். எம். லாபிர், ' கல்ஹின்ன.

ஐக்கிய நாட்டுத் தாபனம் ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்பதை முதலில் நோக்குவோம். இரண்டாவது உலகப் போர் நடைபெற்ற சமயம் ஹிரோசிமாவில் அணுக்குண்டு வீசப்பட்டது. இந்த அணுக்குண்டினால் பலலட்சம் மக்களின் உயிர் பலியாகியது. இதனை அறிந்த உலகத் தலைவர்கள் இதற்கு முடிவு காண எண்ணி யுத்தம் புரிவது மனித சமுதாயத்திலே வரவேற்கத்தக்கதல்ல என்று விரும்பினர். இதனால் உண்டானதே இத்தாபனம். இது 1945-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24-ந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்கா தலைவராகிய றூஸ்வெல்ற்றும், சேர்ச்சிலும் ஒன்று கூடி தமது நாடுகளின் நோக்கங்களை வெளிப்படுத்தும் பட்டயம் ஒன்றை வெளியிட்டனர். அது அத்திலாந்தி பட்டயமெனப்படும். இது தனி மனிதனதும், நாடுகளினதும் சுதந்திரத்தைப் பெறுவதற்கும், மக்கள் விடுதலை பெறுவதற்கும் உதவுவதாக உறுதியளித்தது. இப்பட்டயம் 26 தேச நாடுகளின் பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதன் நோக்கம் என்னவென்றால் ' உலக அமைதியைப் பாதுகாப்பதும், மனித குலத்தின் சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவுவதுமே' ஆகும். முதலாவது உலகப் போரின் பின் நிறுவப்பட்ட சர்வதேச சங்கமும் இதே நோக்கங்களுக்காகவே நிறுவப்பட்டது.

இத் தாபனம் ஒரு செயலகத்துடன் பொதுச்சபை, பாதுகாப்புச்சபை எனும் இரு சபைகளைப் பிரதான உறுப்புக்களாகக் கொண்டுள்ளது. பொதுச்சபையில் எல்லா நாடுகளும் உறுப்பினராகச் சேரலாம். இது புதிய அங்கத்தவர்களையும், ஆண்டு வரவு - செலவுத் திட்டங்களையும் அங்கீகரிப்பதோடு, உலக விடயங்கள் பற்றிய கருத்துப் பரிமாறலுக்கும், விவாதத்துக்கும் இடமளிக்கும் மன்றமாக இயங்குகிறது. பாதுகாப்புச் சபையில் பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா. சோவியத் யூனியன், தேசீய சீனா ஆகியன நிரந்தர உறுப்பினர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுள்ளன. பொதுச்சபையிலிருந்து ஈராண்டுகளுக்கொரு முறை தெரிவு செய்யப்படும். ஆறு நாடுகள் அதன் ஏனைய உறுப்பினராகும். 1963-ல் இதன் பட்டயம் திருத்தியமைக்கப்பட்டு நிரந்தரமற்ற உறுப்பினர்தொகை ஆறிலிருந்து பத்தாக அதிகரிக்கப்பட்டது. அதன்படி 1966 முதல் பத்து உறுப்பினரில் ஐவர் ஆசியா, ஆபிரிக்கா நாடுகளிலிருந்தும், இருவர் லத்தீன், அமெரிக்கா நாடுகளிலிருந்தும், இருவர் லத்தீன், அமெரிக்கா நாடுகளிலிருந்தும், ஒருவர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், எஞ்சிய இருவரும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், ஏனைய நாடுகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றனர். பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினருக்கு எத்தீர்மானத்தையும் ரத்துச் (வீட்டோ) செய்யும் உரிமையுண்டு.

இதன் செயலகத்தின் பிரதான அலுவலகங்கள் நியூயோர்க்கிலும், சில சுவிற்சர்லாந்திலுமுள்ளன. இதில் மிகவும் உயர்ந்த பதவி காரியதரிசியாகும். இதன் முதலாவது காரியதரிசியாக நோர்வேயைச் சேர்ந்த லீ ( Lie ) என்பவர் பணியாற்றினார். அவருக்குப் பின்னர் சுவீடனைச் சேர்ந்த டாக்டர் ஹவர்சீல்ட் (Hamarsilt) என்பவர் 1954 முதல் 1961 வரை சேவை செய்தார். இவர் 1961-ல் ஐ.நா. தாபனத்தின் சமாதானத் தூதுவராகக் கொங்கோ நாட்டிற்குச் செல்லும்பொழுது விமான விபத்துக்குள்ளாகி இறந்தார். இவருக்குப்பின் பர்மாவைச் சேர்ந்த ஊதாண்ட் (U Thant) சேவை செய்கின்றார். இவர் இன்றும் செயலாற்றி வருகிறார்.

ஐ. நா. தாபனத்தில் பல பிரதான உறுப்புக்கள் உள்ளன. அவற்றில் மூன்றாவது முக்கிய உறுப்பு பொருளாதார சமூக நலக் கழகமாகும். (E. C. O. S. O. C.) இதன்கீழ் பல விசேட நிறுவனங்கள் இயங்குகின்றன. அவற்றுள்:

உலக சுகாதாரத் தாபனம் (W. H.O.)
சர்வதேச தொழிலாளர் தாபனம் (I.L.O.)
உணவு விவசாய தாபனம் (F. A. O.)
ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாச்சாரத் தாபனம் (U. N. E. S. C. O.) முக்கியமானவை.



இதன் முக்கிய நோக்கம் உலகில் எல்லா நாடுகளிலும் விஞ்ஞானம், கலாச்சாரம் பற்றிய தெளிவான அறிவைப் பரப்பி உலகில் சமாதானத்தை நிலை நிறுத்தி விருத்தி செய்வதாகும்.

இதன் நான்காவது பிரதான உறுப்பு நம்பிக்கைப் பொறுப்புக் கழகமாகும். இதன் ஐந்தாவது பிரதான உறுப்பு சர்வதேச நீதிமன்றமாகும்.

இதன் பொதுச் சபையில் இன்று 115 நாடுகள் உறுப்பினராயுள்ளன. ஆயினும் உலகின் குடிசனத் தொகையில் மொத்தத்தில் 5/1 ஐ உடைய சீனா அதில் இன்னமும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படாதது ஒரு பெரிய குறைபாடாகும். இதை நிவர்த்திக்க இந்தியா இலங்கை முதலிய நடுநிலை நாடுகள் முயன்று வருகின்றன. இதைச் சேர்த்துக் கொள்வதற்கு சென்ற வருடம் ஐ. நா. சபையில் வாக்கெடுப்பு நடைபெற்றது. சீனாவுக்குச் சாதகமாக 48 வாக்குகளும், பாதகமாக 56 வாக்குகளும் கிடைத்தன. இதில் 21 நாடுகள் கலந்துகொள்ளவில்லை. இலங்கை 1955-ம் ஆண்டு உறுப்பினராகியது.

இதில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டிலும் ஐ. நா. வின் செயலகம் உண்டு. இது இலங்கையிலும் உண்டு. ஐ. நா. வின் இலங்கைச் செயலகத்தின் தலைவர் திரு. டி. சிறி ராமநாதன். (T. Sri Ramanathan.) உலகின் மிக உன்னத பதவியாகக் கருதப்படும் ஐ. நா. சபைத் தலைவர் பதவியை இந்தியாவைச் சேர்ந்த விஜய லட்சுமி பண்டிட் 1953 முதல் 1954 வரை வகித்தார். (இவரே இதில் பங்கு பற்றிய பெண்மணி) இதன் தற்போதைய தலைவர் நோர்வேயைச்சேர்ந்த எட்வட் ஹம்பிரே.

இனி இதன் சாதனைகளை நோக்குவோம். ஐ. நா. நிறுவப்பட்டபின்னர் எழுந்த பிரச்சினைகளில் முக்கியமானது பலஸ்தீன் பிரச்சினையாகும். இது 1948-ல் அராபியருக்கும் யூதருக்குமிடையில் நடைபெற்றது. போரின் பின் ''இஸ்றேல்'' என்னும் நாடு உருவாகியது. அந்த நாள் முதல் அதன் எல்லைகளை ஐ. நா. பார்வையாளர்கள் கண்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணித்து வந்தனர். (1967யூன்வரை) இந்த ஆண்டு இஸ்றேல் அரேபியா எல்லைகளை ஆக்கிரமித்தது. இன்றும் ஆக்கிரமித்துக் கொண்டுதான் இருக்கிறது. 1950-ல் கொரியாப் போரைநிறுத்தியது. அடுத்ததாக 1956-ல் பிரித்தானியாவும், பிரான்சும் சூயஸ் கால்வாயை ஆக்கிரமித்தபோது ஐ. நா. அதில் தலையிட்டு அவ்வல்லரசுகளைப் பின்வாங்கச் செய்தது. 1960-ல் கொங்கோவில் ஓர் கொடிய உள்நாட்டுப் போர் இடம் பெற்றது. அவ்வேளை ஐ. நா. படையொன்று போரில் பங்கு பற்றியது. 1969-ல் அப்படை நாட்டைவிட்டு நீங்கியது. 1947 இலும் 1965 இலும் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்தது. இந்தோனேசியாவுக்கும், ஒல்லாந்துக்குமிடையிலுள்ள பிணக்கைத் தீர்த்து வெற்றி பெற்றது. இதன் சாதனைகள் இன்னும்பல உண்டு.

ஐ. நா. தாபனம் தனது கால் நூற்றாண்டு விழாவை (வெள்ளி விழா) இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 24-ந் திகதி வெகு விமரிசையாக கொண்டாடியது. இதை உலகிலுள்ள இதன் கிளைகள் எல்லாம் மிகக் கோலாகலமாக கொண்டாடியது. இலங்கையும் இதைச் சிறப்பாகக் கொண்டாடி இதற்கு முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது. இதன் சாதனைகள் மிகவும் பாராட்டத்தக்கன. 3-வது உலகப் போரை இது நிறுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஐ. நா. சபைக்கு இலங்கை மக்களாகிய நாங்களும் இச்சமயத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

உருவகக் கதை

## சுயநலம்

திக்குவல்லை கமால்

சின்னஞ்சிறு மீனொன்றைத் தூண்டிலில் கோர்த்து வீசியபடி குளத்தருகே நின்றிருந்தான் அந்த மனிதன். அச் சின்னஞ் சிறு மீனுக்கோ உயிர் போகும் கடைசிக் கட்டம். அந்த நேரத்திலும் அது எப்படியாவது தப்



பிக் கொண்டு வாழத் தான் ஆசைப்பட்டது. அப்போது தனக்கு இரையொன்று வாய்த்துவிட்டதே என்ற மகிழ்ச்சியில் போலும் பெரிய மீனொன்று விரைந்து வந்தது.

"ஐயோ! நான் பெரிய சிக்கொன்றில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து என்னை எப்படியாவது காப்பாறறுங்கள்" என்று கெஞ்சிப் பணிந்து வேண்டியது சின்ன மீன்.

அதைக் கேட்டதும் பெரிய மீன் ஏளனமாகச் சிரித்துவிட்டு 'நீர் எந்தச் சிக்கில் இருந்தாலும் எனக்கென்ன?' என்ற பாணியில் முரட்டுப் பார்வையுடன் வாயைப் பிளந்துகொண்டு அதனைச் சுற்றிக்கொண்டு நின்றது.

அதன் மன நிலையை உணர்ந்த சின்ன மீனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அந்த வேதனை விளிம்பில் "சீ! இவ்வளவு சுயநலவாதியாக இருக்கின்றீரே. இந்த நேரத்தில்கூட உமது இனம் என்று எண்ணப் பாசமாவது வரவில்லையா? என்று கேட்டே விட்டது"

"ஹ்ம்.. என்னை அவமதிக்கவும் தயாராகிவிட்டாயா குட்டிப் பயலே; இதோ உன்னைத் தீர்த்துக் கட்டுகிறேன் பார்" என்று கொதித்துக் சுமுறியபடி துள்ளிப் பாய்ந்து "பக்" கென அதனை விழுங்கியது.

அடுத்த கணம் தூண்டிலில் சிக்கிக் கொண்ட அந்தப் பெரிய மீனை "விசுக்" கென்று இழுத்தெடுத்துக் கரையிலே போட்டான் அவன்.

"சே... தனது சுயநலத்திற்காக எம்மைக்கொன்று குவிக்க முனைந்து விட்டானே இந்த மனிதன்" என்று பதை பதைத்தவாறு முணுமுணுத்தது அந்த மீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசு கிறீஸ்து மகானின்
# அமுத வாக்குகள்

தொகுத்தவர் : "காரை ஏ. சக்தி"

1. "இறைவனாற் படைக்கப்பட்ட எல்லா மக்களும் சகோதரர்களே, ஆதலின் ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சகோதரர்களாக எண்ணி, அவர்களிடம் அன்பு பாராட்டி ஒன்றுபட்டு வாழ வேண்டும்."

2. "நீங்கள் எப்போதும் சமாதானத்தையே நாட வேண்டும்."

3. "நீங்கள்; கொலை, கொள்ளை, கோபம், பொய் முதலிய தீக்குணங்களை அணுகாதவாறு காத்துக் கொள்ள வேண்டும்."

4. "தீய செயல்களைப்பற்றி மனத்தால் நினைத்தலே தீமை பயக்குமெனின், மற்றவைகளைப் பற்றிக் கூற வேண்டுமா?"

5. "நீங்கள், உங்களிடத்தில் மற்றவர் அன்போடும் மரியாதையோடும் நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புவது போலவே, நீங்களும் மற்றவரிடத்தில் அன்போடும் மரியாதையோடும் நடந்து கொள்ள வேண்டும்."

6. "நீங்கள் நற்காரியங்களைச் செய்யும்போது அவை உங்கள் கடமையென்று கருதிச் செய்தல் வேண்டுமே அன்றிப் புகழை விரும்பிச் செய்தல் கூடாது."

7. "நீங்கள், ஏழைகளுக்குப் பொருளுதவி செய்தால் அதைப் பற்றிப் பிறர்க்கு அறிவியாதிருத்தல் வேண்டும்."

8. "நீங்கள், எதையும் பிறர்க்குக் கொடுப்பதாயிருந்தால் வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாதவாறு கொடுத்தலே சாலச்சிறந்தது."

9. "நீங்கள், உங்களுடைய மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் தூய்மையுடையவையாக வைத்திருத்தல் வேண்டும்."

10. "உங்களுக்குப் பகைவர்கள் இருப்பின், அவர்களுக்குத் தீங்கிழைக்க எண்ணுமல், அவர்களிடம் அன்பு பாராட்டுவதோடு அவர்களை நல்வழிப்படுத்துமாறு ஆண்டவனை வழிபடவும் வேண்டும்."



தொடர்ச்சி:

## 1-10-69தொடக்கம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும்
# புதிய சம்பள விகிதம்

### தலைமை ஆசிரியர் தரம் II ஆ. த. ப. 2-ம் வகுப்பு

பழைய ச. வி. 1128—4 | 72—1416 வருடம்
புதிய ச. வி. 3180—5 | 90—3630 ,,

| மாத. ப. ச. வி. | பு. ச. வி. | ப. ச. வி. | பு. ச. வி. |
|---|---|---|---|
| 94-00 | 265-00 | 112-00 | 287-50 |
| 100-00 | 272-50 | 118-00 | 295-00 |
| 106-00 | 280-00 | | 302-50 |

### தலைமை ஆசிரியர் தரம் II ஆ. த. ப. 3-ம் வகுப்பு

பழைய ச. வி. 960—2 | 48—1056
புதிய ச. வி. 2940—2 | 60—3060

| மாத. ப. ச. வி. | பு. ச. வி. | ப. ச. வி. | பு. ச. வி. |
|---|---|---|---|
| 80-00 | 245-00 | 88-00 | 255-00 |
| 48-00 | 205-00 | | |

### உதவி ஆசிரியர்கள்

### ஆரம்ப பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் 1-ம் வகுப்பு
Junior Traind Ist Class

பழைய ச. வி. 1272—14 | 72—6 | 120—3000 வருடம்
புதிய ச. வி. 3360—12 | 90—8 | 144—5592 ,,

| மாத.ப.ச.வி. | பு.ச.வி. | மா.ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. |
|---|---|---|---|---|---|
| 106 | 280-00 | 148 | 332-50 | 190 | 394 |
| 112 | 287-50 | 154 | 340-00 | 200 | 406 |
| 118 | 295-00 | 160 | 347-50 | 210 | 418 |
| 124 | 302-50 | 166 | 355-00 | 220 | 430 |
| 130 | 310-00 | 172 | 362-50 | 230 | 442 |
| 136 | 317-50 | 178 | 370-00 | 240 | 454 |
| 142 | 325-00 | 184 | 382-00 | 250 | 466 |

### ஆரம்ப பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 2-ம் வகுப்பு
Junior Traind 2nd Class

பழைய ச. வி. 1056—2 | 75—1200 வருடம்
புதிய ச. வி. 3090—4 | 90—3450 ,,

| மா. ப. ச. வி. | பு. ச. வி. | மா. ப. ச. வி. | பு, ச. வி. | பு. ச. வி. |
|---|---|---|---|---|
| 88 | 257-50 | 100 | 272-50 | 287-50 |
| 94 | 265-00 | | 280-00 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தராதரப் பத்திரம் 1-ம் வகுப்பு Certificated Ist Class

பழைய ச. வி. 1050—11 | 42—1512 வருடம்
புதிய ச. வி. 3060—11 | 60—3720 ,,

| மா.ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. |
|---|---|---|---|---|---|
| 87-50 | 255 | 101-50 | 275 | 115-50 | 295 |
| 91-00 | 260 | 105-00 | 280 | 119-00 | 300 |
| 94-50 | 265 | 108-50 | 285 | 122-50 | 305 |
| 98-00 | 270 | 112-00 | 290 | 126-00 | 310 |

## தராதரப் பத்திரம் 2-ம் வகுப்பு Certificate 2nd Class

பழைய ச. வி. 864—4 | 36—1008 வருடம்
புதிய ச. வி. 2820—4 | 60—3060 ,,

| மா.ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. |
|---|---|---|---|---|---|
| 72 | 235 | 78 | 245 | 84 | 255 |
| 75 | 240 | 81 | 250 | | |

## தராதரப் பத்திரம் 3-ம் வகுப்பு Certificate 3rd Class

பழைய ச. வி 768—2 | 30—828 வருடம்
புதிய ச. வி. 2640—2 | 54—2748 ,,

| மா.ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. |
|---|---|---|---|---|---|
| 64-00 | 220 | 66-50 | 224-50 | 69-00 | 229 |

## சேவைத் தராதரப் பத்திரம் 2-ம் வகுப்பு
## Service Certificate 2nd Class

பழைய ச. வி. 804—9 | 30—8 | 42—1410 வருடம்
புதிய ச. வி. 2694—9 | 54—8 | 60—3660 ,,

| மா.ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. |
|---|---|---|---|---|---|
| 67-00 | 224-50 | 82-00 | 251-50 | 100-00 | 280 |
| 69-50 | 229-00 | 84-50 | 256-00 | 103-50 | 285 |
| 72-00 | 233-50 | 87-00 | 260-50 | 107-00 | 290 |
| 74-50 | 238-00 | 89-50 | 265-00 | 110-50 | 295 |
| 77-00 | 242-50 | 93-00 | 270-00 | 114-00 | 300 |
| 79-50 | 247-00 | 96-50 | 275-00 | 117-50 | 305 |



## சேவைத் தராதரப் பத்திரம் 3-ம் வகுப்பு
## Service Certificate 3rd Class

பழைய ச. வி. 768—15 | 30—1218 வருடம்
புதிய ச. வி. 2640—15 | 54—3450 ,,

| மா.ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. |
|---|---|---|---|---|---|
| 64-00 | 220-00 | 76-50 | 242-50 | 89-00 | 265-00 |
| 64-50 | 224-50 | 79-00 | 247-00 | 91-50 | 269-50 |
| 69-00 | 229-00 | 81-50 | 251-50 | 94-00 | 274-00 |
| 71-50 | 233-50 | 84-00 | 256-00 | 96-50 | 278-50 |
| 74-00 | 238-00 | 86-50 | 260-50 | 99-00 | 283-00 |
| | | | | 101-50 | 287-50 |

## தராதரப் பத்திரம் அற்றவர் 1-10-45 க்கு முன் கைப்பணி

பழைய ச. வி. 660—21 | 18—1038, 660—12 | 30—1 | 18—1038 வருடம்
புதிய ச. வி 2424—13 | 54—3126

| மா.ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. | ப.ச.வி. | பு.ச.வி. |
|---|---|---|---|---|---|
| 55-00 | 202-00 | 67-50 | 224-50 | 80-00 | 247-00 |
| 57-50 | 206-50 | 70-00 | 229-00 | 82-50 | 251-50 |
| 60-00 | 211-00 | 72-50 | 233-50 | 85-00 | 256-00 |
| 62-50 | 215-50 | 75-00 | 238-00 | 86-50 | 260-50 |
| 65-00 | 220-00 | 77-50 | 242-50 | | |

✱✱

### விடு(டி)கதை

நெருப்பின்றிப் புகைவருமா
நெருப்புண்டு அங்கே
மலர் இன்றி மணம் வருமா
மலர் இல்லை அங்கே
நேரம் கரையத்தான் கரையும்
நீறுமட்டும் மிஞ்சும்
புகைவருமாம் மணம்வருமாம்
புகலுவீர் அப்பேரை.

[illegible] : [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### படப்போட்டிக் கூப்பன்

பெயர்:- ..............................................................

முகவரி:- ..............................................................

சரியான விடை:-
1. குடை

இப்படத்தில் காணப்படும் அத்தனையையும் ஒன்றின்கீழ் ஒன்ருக எழுதி 5-1-71க்கு முன் அனுப்புக. முதலாவதாகத் திறக்கப்படும் சரியான விடைக்கு பொங்கற்பரிசாக 10ரூபா கொடுக்கப்படும்.

—ஆசிரியர்

அனுப்ப வேண்டிய முகவரி:-
வெற்றிமணி, 253 1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### நாவலர் நினைவுப்

# பேச்சு வன்மைப் போட்டிகள்

நாவலர் வாரத்தை யொட்டி புத்தளம் இந்து இளைஞர் மன்றத்தினர் விவேகானந்த சபையினரின் ஆதரவில் அகில இலங்கை ரீதியான பேச்சுப் போட்டியை நடாத்தினர், புத்தளம் சைவ மண்டபத்தில் நடைபெற்ற பூர்வாங்க போட்டியின்போது திரு: சி. வே. மகேசவேலு (எம். ஏ. டிப்ளோமா) திரு. மு. சி. ஸ்ரீதயாளன் (ஆசிரியர்), திரு. செ. நடராஜா (கச்சேரி) ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர். மன்றச் செயலாளர் திரு. இ. க. கௌரிநாதன் போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். போட்டி முடிவுகள் :

| | | |
|---|---|---|
| கீழ்ப் பிரிவு : | ஞா. சகுந்தலாதேவி<br>க. மோகன குமார் | முதலாம் இடம் |
| மத்திய பிரிவு : | க. சண்டேஸ்வரி | முதலாம் இடம் |
| கீழ்ப் பிரிவு : | ஞா. யசோதரா | முதலாம் இடம் |
| | க. கணேஸ்வரி | இரண்டாம் இடம் |

போட்டிகளின் முடிவில் நன்றி தெரிவித்துப் பேசிய செயலாளர் க. கௌரிநாதன் "ஈழத்தில் கலை வளர, நாவலர் இலட்சியம் நிறைவேற, நாம் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்" என்ருர். அத்துடன் "வெற்றிமணி"ப் பத்திரிகையை புத்தள மக்களுக்கு அறிமுகமும் செய்து வைத்தார்.

## 1-10-69 தொடக்கம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதப் பட்டி

ஆங்கில ஆசிரியர்கள் சுய பாஷை ஆசிரியர் ப்ர்கள். தலைமையாசிரியர்கள் — பாடசாலை ... கள், ஆய்வுகூடப் பணியாளர்கள் யாவரினதும் சம் விபரம் அடங்கியது. ஒவ்வொரு ஆசிரியரும் தத்தம் பள விகிதத்தை அறிய உதவியாக உள்ளது.

விலை சதம் 50

சக்தி அச்சகம், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதியப்பட்டது: QB3033

புதுவருடத்துக்கான

மிகச் சிறந்த தயாரிப்பு

# ஆனந்தா

திருக்குறட்

# கலண்டர்

சரியாக
1.

...ரிப்பாளர்:-

ஆனந்தா அச்சகம்

கே. கே. எஸ் வீதி, - யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை, சக்தி அச்சகத்தினருக்காக, பொன் இராசரத்தினம் அவர்களால் யாழ், ஸ்ரான்லி வீதி, 253 1/1 இலக்கத்திலுள்ள சக்தி அச்சகத்தில் 15-12-70இல் அச்சிட்டு வெளியிடப்ப...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org